கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலைகலாசார பீடம்

நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
2009/2010 (MARCH 2015)

PHYS- **4101** – கட்டமைப்பு வாதமும், பின்நவீனத்துவமும்

**(Structuralism and Post Modernism)**

13 MAY 2015
EASTERN UNIV

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து ஏதேனும் மூன்று வினாக்களுக்கும், பகுதி II இல் இருந்து ஏதேனும் ஒரு வினாவிற்குமாக மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக

---

பகுதி-I

01. அ) கட்டமைப்பு வாதம் என்றால் என்ன என்பதை விளக்கி, அது எவ்வகையில் சமூக விஞ்ஞானங்கள் மற்றும் கலை இலக்கிய துறைகளில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது என்பதை ஆராய்க. (09புள்ளிகள்)

ஆ) பேட்டினன் டி சசூரின் மொழி பற்றிய கருத்துக்கள் இடைநிலை அளவையியலை அடிப்படையாகக் கொண்ட எண்ணக்கருக்களை உள்ளடக்கியது. விளக்குக. (08புள்ளிகள்)

இ) “பார்த் தன்னை கட்டமைப்பு வாதியாகவும் பிறகட்டமைப்பு வாதியாகவும் அடையாளப்படுத்திக் கொள்கின்றார்” இக்கூற்றினை மதிப்பிடுக. (08புள்ளிகள்)

02. அ) “இலக்கியம் பற்றிய கட்டமைப்புவாத அணுகுமுறை முழுமையற்றது” இக்கூற்றினை விமர்சன ரீதியாக ஆராய்க. (09புள்ளிகள்)

ஆ) சசூரின் அர்த்தம் பற்றிய கருத்துக்களுக்கு எதிரான டெரிடாவின் விமர்சனங்களை விளக்குக. (08புள்ளிகள்)

இ) டெரிடாவின் பேச்சுமைய வாத விமர்சனம், பௌதீக அதீ
இருப்புநிலை என்ற கருத்துக்களை விமர்சன ரீதியாக ஆராய்க. (08புள்ளிகள்)

03. அ) போடியரின் "ஊடக மெய்மை" பற்றி விளக்குக. (09புள்ளிகள்)

ஆ) "பெரும் எடுத்துரைப்புக்கள் பற்றிய விமர்சனமே பின்நவீனத்துவம்" இக்கூற்றினை மதிப்பிடுக. (08புள்ளிகள்)

இ) "சார்பு நிலைப்பட்ட தீர்ப்பு" என்ற லியோடாவின் கருத்தினை விமர்சன ரீதியாக ஆராய்க. (08புள்ளிகள்)

04. அ) லக்கானின் உளவியல் மொழி வெளிப்பாட்டினை மதிப்பிடுக. (15புள்ளிகள்)

ஆ) லக்கானின் மெய்மை ஒழுங்கு (Real Order), கற்பனை ஒழுங்கு (Imaginary Order), குறியீட்டு ஒழுங்கு (Symbolic Order) என்பவற்றை விளக்குக. (10புள்ளிகள்)

## பகுதி –II

05. "நவீனத்துவத்திலிருந்து முற்றுமுழுதாக வேறுபட்டதே பின்நவீனத்துவம்" இக்கூற்றினைத் தெளிவுபடுத்துக. (25புள்ளிகள்)

06. லெவி ஸ்ட்ரோஸின் (Levi Strauss) கட்டமைப்பு வாதம் பற்றிய கருத்துக்களை விமர்சன ரீதியாக ஆராய்க. (25புள்ளிகள்)